இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

**CISL எனப்படும் இத்தாலியத் தொழிலாளர் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் 20-வது தேசிய மாநாட்டிற்கு அனுப்பியுள்ள செய்தியொன்றில், "மனித மேம்பாட்டுக்கு சேவை செய்யும் அமைதியான சமூகங்களை மேம்படுத்துவதற்கான அழைப்பொன்றை விடுத்துள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ".**

# மனிதகுலத்திற்கு சேவை செய்யும் சமூகங்களை மேம்படுத்துங்கள்!



சிமிஷிலி எனப்படும் இத்தாலியத் தொழிலாளர் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பினர் (கோப்புப் படம்) (ANSA)

CISL எனப்படும் இத்தாலியத் தொழிலாளர் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் 20-வது தேசிய மாநாட்டிற்கு அனுப்பியுள்ள செய்தியொன்றில், "மனித மேம்பாட்டுக்கு சேவை செய்யும் அமைதியான சமூகங்களை மேம்படுத்துவதற்கான அழைப்பொன்றை விடுத்துள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ".

கடந்த ஜூலை 16-ஆம் நாள் புதன்கிழமையன்று, திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்கள் வழியாக வழங்கியுள்ள இச்செய்தியில், மிகவும் மனிதாபிமான சமூக ஒழுங்கைக் கட்டியெழுப்புவதை வலியுறுத்தியுள்ள திருத்தந்தை, பங்கேற்பாளர்கள் தங்கள் சமூகப் பொறுப்புகளில் உறுதியாக இருக்கவும் ஊக்கப்படுத்தியுள்ளார்.

திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் தனது உரையில், புனித அகுஸ்தினாரின் வாழ்விலிருந்து, "ஒழுங்கின் அமைதி" என்ற கருத்தியல் குறித்தும் அவர்களுக்கு விளக்கியுள்ளார்.

இம்மாநாட்டில் பங்கேற்ற இத்தாலிய அரசுத் தலைவர் செர்ஜியோ மத்தெரெல்லா அவர்களும், "பங்கேற்பின் துணிவு" என்ற கருப்பொருளைப் பாராட்டி உரையாற்றினார்.

மேலும் "மக்களாட்சியில் தொழிலாளர் பங்கேற்பின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டிய" மத்தெரெல்லா அவர்கள், வேலை செய்யும் உரிமை மற்றும் நியாயமான ஊதியம் முன்னேற்றத்திற்கும் மனித மாண்பிற்கும் இன்றியமையாதது என்பதை மீண்டும் உறுதிப்படுத்தினார்.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# காசாவில் போர் நிறுத்தத்திற்கு திருத்தந்தை மீண்டும் அழைப்பு


உணவைப் பெறக் காத்திருக்கும் புலம்பெயர்ந்த காசா மக்கள் (ANSA)

இஸ்ராயேல் இராணுவத்தால் தாக்குதலுக்கு உள்ளான காசாவின் திருக்குடும்ப கத்தோலிக்க தேவாலயப் பங்குதளத்தில் வாழும் மக்களுடன் திருத்தந்தையின் ஒருமைப்பாட்டை வெளியிட்டு தந்திச் செய்தி ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

காசா கத்தோலிக்க தேவாலயம் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து திருத்தந்தை 14ஆம் லியோ அவர்களின் ஆழ்ந்த கவலையை வெளியிட்டு திருத்தந்தையின் சார்பில் தந்திச் செய்தி ஒன்றை அனுப்பியியுள்ள திருப்பீடச் செயலர், கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்கள், உடனடி போர் நிறுத்தம் இடம்பெறவேண்டும் என திருத்தந்தை மீண்டும் அழைப்பு விடுத்துள்ளதையும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ராயேல் இராணுவத்தின் இந்த தாக்குதலால் காயமுற்ற பங்குதள அருள்பணியாளர் கபிரியேல் ரொமெனெல்லி உட்பட அனைத்து பங்குதள மக்களுடனும் ஆன்மீக முறையில் மிக நெருக்கமாக இருப்பதாகவும், உயிரிழந்தவர்களுக்காக ஜெபிப்பதாகவும் திருத்தந்தையின் தந்திச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போர் நிறுத்தத்திற்கும் அமைதிக்கும் திருத்தந்தை மீண்டும் அழைப்பு விடுப்பதாகவும், பேச்சு வார்த்தைகள், ஒப்புரவு, மத்தியக் கிழக்கில் நீடித்த அமைதி ஆகியவை குறித்த நம்பிக்கையை வெளியிடுவதாகவும் அச்செய்தி மீண்டும் எடுத்துரைக்கிறது.

இத்தாக்குதல் குறித்து தன் வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ள எருசலேம் இலத்தீன் வழிபாட்டுமுறை முதுபெரும் தந்தை கர்தினால் பியெர்பத்திஸ்தா பிட்சபாலா அவர்கள், மனிதாபிமான முறையிலும், ஒழுக்க ரீதியாகவும் நியாயப்படுத்தப்பட முடியாத இத்தகைய தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என அனைத்துத் தலைவர்களும் தங்கள் குரலை எழுப்பவேண்டும் என விண்ணப்பம் ஒன்றை விடுத்துள்ளார்.

இதற்கிடையே, காசா திருக்குடும்ப பங்குதள வளாகத்தில் இடம்பெற்ற இஸ்ராயேல் இராணுவத்தின் தாக்குதலுக்கு எதிராக, யெருசலேமின் கிறிஸ்தவ சபைகளின் முதுபெரும் தந்தையர்களும் தலைவர்களும் இணைந்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

வியாழக்கிழமையன்று இடம்பெற்ற இஸ்ராயேல் இராணுவ தாக்குதலால் மூன்று பேர் இறந்துள்ளனர், பங்குதள அருள்பணியாளர் உட்பட பலர் காயமடைந்துள்ளனர்.

காசாவின் ஒரே கத்தோலிக்கப் பங்குதளமான திருக்குடும்பத் தேவாலய வளாகத்தில் இடம்பெயர்ந்த மக்கள் ஏறக்குறைய 500 பேருக்கு புகலிடம் கொடுக்கப்பட்டு அவர்கள் அங்கு வசித்து வருவது குறிப்பிடத்தக்கது.

2023ஆம் ஆண்டு அக்டோபர் 7ஆம் தேதி காசா மோதல் துவங்கியதிலிருந்து இதுவரை 58,313 பாலஸ்தீனியர்கள், 1,983 இஸ்ராயேலர்கள் உட்பட 60,200 பேருக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர் என காசாவின் நல அமைச்சகம் தெரிவிக்கிறது.

கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான்

# தென்கொரியாவின் சியோலில் உலக இளையோர் தின தயாரிப்புகள்


கொரிய நாட்டு இளையோர் (AFP or licensors)

2027ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கத்தோலிக்க இளையோர் தினம் இன்றைய இளைஞர்களுக்கு ஒரு திருப்புமுனையாக இருக்கும் என்று, பொதுநிலையினர், குடும்பங்கள் மற்றும் வாழ்விற்கான திருப்பீடத் துறையின் செயலர் Gleison de Paula Souza நம்பிக்கைத் தெரிவித்துள்ளாதாக யூகான் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஜூலை 8 முதல் 13 வரை தென் கொரியாவிற்கு பயணம் மேற்கொண்டபோது இதனைத் தெரிவித்த Gleison அவர்கள், 2027 ஆம் ஆண்டு உலக இளையோர் தின நிகழ்வில் திருத்தந்தை 14ஆம் லியோ அவர்களும் கலந்து கொள்வார் என்று உறுதிப்படுத்தியதையும் குறிப்பிட்டுள்ளது அச்செய்தி நிறுவனம்.

மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் உலகளாவிய கத்தோலிக்க இளைஞர் கூட்டம், உலகம் முழுவதிலுமிருந்து பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை ஈர்த்துள்ளது என்றும் யூகான் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

1985 ஆம் ஆண்டு திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் அவர்களால் இத்தினம் நிறுவப்பட்டது.

உலகளவில், குறிப்பாக தென் கொரியாவில் இளைஞர்களிடையே தற்கொலை விகிதம் அதிகமாக இருப்பதைக் குறிப்பிட்டு, இன்றைய உலகில் இளைஞர்கள் சந்திக்கும் தனிப்பட்ட பிரச்சனைகள், துன்பங்கள், வெறுப்பு மற்றும் கவலைகள் பற்றித் திருஅவையும் சமூகமும் நன்கு அறிந்திருக்கிறது என்றும் Gleison அவர்கள் கூறியதையும் அச்செய்தி நிறுவனம் எடுத்துரைத்துள்ளது.

ஜூலை 9 அன்று, சியோல் மறைமாவட்டத்தின் துணை ஆயர் Paul Kyung Sang Lee, அத்தலத் திருஅவையின் இளையோர் தின ஏற்பாட்டுக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் பிற தன்னார்வலர்களுடன் இணைந்து Gleison அவர்கள், Jeoldusan மறைசாட்சிகளின் ஆலயத்தில் மரக்கன்றுகளை நட்டார் என்றும் தெரிவித்துள்ளது அச்செய்தி நிறுவனம்.

கொரிய இளைஞர்கள் மேற்கொண்ட மரம் நடும் முயற்சிக்கு பாராட்டு தெரிவித்த Souza அவர்கள், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான முயற்சிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், நான்ஜிடோ தீவில் 10,000 மரக்கன்றுகளை நட வேண்டும் என்ற அவர்களின் இலக்கில் திருப்பீடத்தின் ஆதரவைக் காட்டுவதே இந்த நிகழ்வின் நோக்கமாகும் என்று கூறியதையும் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மரம் நடும் நிகழ்விற்கு முன்னதாக, உலக கத்தோலிக்க இளையோர் தினத்தில் தன்னார்வலர்களின் பணியின் நிலை குறித்து அவர்களுக்கு விளக்குவதற்காக, சியோலின் மியோங்டாங்கில் உள்ள WYD திட்டமிடல் அலுவலகத்தில் நடந்த ஒரு கூட்டத்திலும் வத்திக்கான் பிரதிநிதிகள் கலந்து கொண்டதாகவும் அச்செய்தி நிறுவனம் தகவலளித்துள்ளது.

ஜெர்சிலின் டிக்ரோஸ் - வத்திக்கான்

# மலேசிய கிறிஸ்தவ தமிழ் வளர்ச்சிப் பேரவை

12.7.2025 அன்று செந்தூல் கறி ஹவுஸில் மலேசிய கிறிஸ்தவ தமிழ் வளர்ச்சிப் பேரவை இலக்கிய நிகழ்ச்சியாக நடைபெற்றது.

சுமார் நூற்று ஐம்பது பேர்கள் கலந்து கொண்டனர். இறைவேண்டல், தமிழ் வாழ்த்துப் பாடல், குத்து விளக்கு ஏற்றல், என ஆரம்பித்து ஆடல் பாடலுடன் இலக்கிய சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

செந்தூல் புனித சூசையப்பர் பங்கு அருள்பணியாளர் பெட்ரிக் ஜோசப் அவர்கள் சிறப்புரையாற்றினார். தமது உரையிலே, அன்றைய வெளிநாட்டு கிறிஸ்துவ அருள்பணியாளர்கள் தமிழ் மொழிக் கற்று, தமிழ் பேசும் மக்களுக்கு பணி செய்ததை வெகுவாக பாராட்டினார். இவ்வாறுதான் மறைபரப்புப் பணி செயல்பட்டது.

இன்றும்கூட பிற இன சகோதரர்கள் தமிழுக்கு உணர்வுபூர்வமாக தொண்டு செய்த ஜி.யு.போப், கால்டுவெல்ட், வீரமாமுனிவர், ராபர்ட் தி நோபிலி, சீகன் போல் போன்றோர் முறையாக தமிழ் மொழியைக் கற்று ஆன்மீகத்தையும் விதைத்தனர் என்று கூறி இரத்தின சுருக்கமாக முடித்துக் கொண்டார்.

இலக்கிய போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கும், பேரவையின் மூப்பர்களுக்கும் சால்வை அணிவித்து சிறப்பு செய்யப்பட்டது.



செபஸ்தியான் தோமா, ஜோசப் செபஸ்தியான், பிரான்சிஸ், லியோ மரியதாசு நிகழ்ச்சியை வழிநடத்தின சகோ. ஜீவனமணி ஆகியோரின் பங்களிப்பும் பாராட்டத்தக்கது.

ஜோசப் செபஸ்தியான், சிலாங்கூர்





# 2025ம் உலக தாத்தாபாட்டிகள், மற்றும் முதியோர்கள் தினத்தின் திருத்தந்தை லியோவின் செய்தி

## சீராக் 14: 2 – (நம்பிக்கை தளராதோரும் பேறுபெற்றோர்)

வத்திக்கான் ஜூலை 10, நம்பிக்கையின் ஜூபிலி ஆண்டின் செய்திலே திருத்தந்தை லியோ, தாத்தாபாட்டிகள் முதியோர்களை நம்பிக்கையின் சாட்சிகள் என பாராட்டினார். அவர் வலியுறுத்தியது, நம்பிக்கை என்பது எந்நேரமும் மகிழ்ச்சிக்கு ஆதாரம். வயதானாலும் நம்பிக்கை வலிமையாகும். சீராக் 14: 2 – (நம்பிக்கை தளராதோரும் பேறுபெற்றோர்) என்ற கருப்பொருளின் கீழ், திருத்தந்தையின் செய்தி நேரடியாக நம்பிக்கையின் யூபிலி ஆண்டுடன் தொடர்புடையது, அனைத்து வயது கத்தோலிக்கர்களும் தலைமுறைகளுக்கு இடையேயான பிணைப்புகளை ஆழப்படுத்தவும், தனிமையில் இருக்கும் முதியவர்களைச் சென்றடைய முயற்சிகளைப் புதுப்பிக்கவும் அழைப்பு விடுக்கிறது.

நம் வயது எதுவாக இருந்தாலும், நம்பிக்கை என்பது மகிழ்ச்சியின் நிலையான ஆதாரமாகும், மேலும் அது வாழ்க்கையின் சோதனைகளால் சோதிக்கப்படும்போது, அது மேலும் மீள்தன்மையுடனும் ஆழமாகவும் மாறும்" என்று கூறினார்.

அவரது செய்தியின் முக்கிய அம்சங்கள்: முதியோர்களை தேவாலயத்திற்கும் குடும்பத்திற்கும் நம்பிக்கையின் ஒளியாக இருக்கின்றனர். பைபிளில் வயது முதிர்ந்தோர் (ஆபிரகாம், சாரா, மோசே நிக்கதேமு) ஆகியோர் தங்கள் இறுதி ஆண்டுகளில் எவ்வாறு அழைக்கப்பட்டனர் என்பதை நினைவு கூர்ந்தார், முதுமை என்பது ஒரு புனிதமான பணிக்காலம், முதியவர்கள், கிறிஸ்தவ நம்பிக்கையின் முதல் சாட்சிகள் என்றும், இளைஞர்களை அவர்களின் விடாமுயற்சி மற்றும் செபத்தால் ஊக்குவிக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

கத்தோலிக்க சமூகங்கள் "கவனிப்பு மற்றும் நன்றியுணர்வின் நோக்கத்தோடு" ஈடுபடவும், முதியவர்களுக்கு - குறிப்பாக தனியாக வசிப்பவர்களுக்கு - ஆதரவு வலைப்பின்னல்களை உருவாக்கவும் திருத்தந்தை வலியுறுத்தினார். அவர் நடைமுறை நடவடிக்கைகளை ஊக்குவித்தார்: முதியவர்களைப் பார்ப்பது, அவருடன் செல்வது மற்றும் செபத்தால் அரவணைக்கப்பட்ட தருணங்கள், இது ஜூபிலி இன்பத்தைப் பெறுவதற்கான ஒரு வழியாகவும் செயல்படுகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

அனைவரும், எப்போதும், நேசிக்கவும் ஜெபிக்கவும் முடியும்," என்று வலியுறுத்தினார். "இவை எந்த சூழ்நிலையிலிருந்தும் நம்மிடமிருந்து பறிக்க முடியாத சுதந்திரங்கள்."

முதியோர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, இவர்கள் திருச்சபையின் பணிக்கு இன்றியமையாதவர்களாகக் இருக்கிறார்கள் என்று திருத்தந்தை கூறினார்.

பலவீனத்திலும் கூட, நாம் கடவுளைப் புகழ்ந்து போற்றுவதன் மூலம், மற்றவர்களுக்காக நம் இதயங்களைத் திறக்க முடியும்."



**இந்த ஆண்டு உலக தாத்தா பாட்டி மற்றும் முதியோர் தினம் ஜூலை 27, 2025 ஞாயிற்றுக்கிழமை உலகெங்கிலும் உள்ள திருஅவையில் கொண்டாடப்படும்.**

# இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவுபாலம் செபம்தான்

### பொதுக்காலம் 17ஆம் ஞாயிறு

### தொ.நூ 18: 20-32, 2கொரி 2: 12-14, லூக் 11: 1-3

இன்று திருஅவை பொதுக்காலத்தின் பதினேழாம் ஞாயிறைக் கொண்டாடுகிறது. இன்றைய மூன்று வாசகங்களும் இறைவனின் அன்பு, கருணை, மன்னிப்பு, ஆகியவைகள் அடங்கிய மையக் கருத்துகளைக் கொண்டிருக்கிறன.

முதல் வாசகத்திலே, ஆபிரகாமுக்கும் ஆண்டருக்கும் நடக்கும் உரையாடலைக் காண்போம். இங்கு சோதோம் கொமோரா அழிவைப் பற்றி கடவுள் ஆபிரகாமுக்கு வெளிப்படுத்துகின்றார். அந்நகரில் வாழும் நீதிமான்களுக்காக ஆபிரகாம் கடவுளிடம் வேண்டுகிறார். ஆண்டவரும் நீதிமான்களுக்காகத் தண்டனையைத் தள்ளிப்போடுகிறார்.

இரண்டாம் வாசகத்தில் கடவுள் நம் குற்றங்கள் அனைத்தையும் சிலுவை மரணத்தின் வழி மன்னித்ததன் மூலம் மன்னிக்கும் கடவுளை இங்கே பார்க்கிறோம்.

நற்செய்தியிலோ, செபமே கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படையும் ஆணிவேறுமாகும். இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே உறவு பாலத்தை சங்கமித்து பரிமாற்றத்தை வளர்ப்பதுதான் செபம்.

நாம் எப்படி செபிக்க வேண்டும்? கடவுளுடைய அன்பையும் கருணையும், இரக்கத்தையும் அதிகமாக நினைவு கூர்ந்து செபிக்க வேண்டும்.

அடுத்து அவரது விருப்பத்திற்கு எல்லாவற்றையும் விட்டு விட வேண்டும். கேட்பது நமது நிலைப்பாடாயின் அதனைக் கொடுப்பது அவரின் சித்தம். எனவே அவரின் சித்தம் அறிந்து வேண்டுதலை முன் நிறுத்துவது நன்மை தரும். அதாவது நாம் வேண்டுவது கட்டாயமாகக் கிடைக்க வேண்டும் என கட்டாயப்படுத்துவதுக் கூடாது.

இறைவன் நம்மைக் குறித்து என்ன திட்டம் வெளிப்படுத்துகிறாரோ அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் ஒவ்வொருவருக்கும் வேண்டும்.

நற்செய்தியில் நடு இரவில் நண்பனை விடாப்பிடியாய் தொந்தரவு செய்ததால், நண்பரும் உணவு தருகிறார் என நற்செய்தியில் வாசிக்கிறோம். அதுபோலத்தான் நாமும் விடாது செபித்தால் நிச்சயம் ஜெபித்தது நிறைவேறும் என்பது நமது விசுவாசம்.

புனிதர் ஒருவரின் தாய், தன் மகனுக்காக 32 ஆண்டுகள் இறைவனிடத்தில் செபித்ததாக கூறுகிறார்.

மேலும் நற்செய்தியில் தொடர் வேண்டுதலும், தட்டுதலும், தேடுதலும் புதிய விடியலைத் தரும். ஆண்டவர் நமது தேவைகளை அறிந்திருந்தாலும் நமது தேடலில் பதில் தருபவராகவும், நமது முயற்சியை வெற்றிக்கு இட்டுச் செல்பவராகவும் இருக்கிறார்.

தொடர் ஜெபத்திற்கும் தேடலுக்கும் இறைவனின் ஆவியார் துணையாக விண்ணப்பம் செய்வதாக இறைவார்த்தை உறுதி தருகிறது. எனக்கு நல்லதொரு வேலை கிடைக்க வேண்டும், மகளுக்கு நல்லதொரு வரம் அமைய வேண்டும் என செபம் செய்தால் மட்டும் போதாது.

மாறாக இந்த செபம் ஒருசில தீர்க்கமான நிலைபாடுகளுக்கான தேடலை நம்முள் முடுக்கிவிட வேண்டும். அந்த செபமானது நல்லதொரு வேலையை, தக்கதொரு வரனைத் தேடுகின்ற முயற்சியில் தளர்ச்சி ஏற்படாமல் இருக்க சக்தி கொடுக்கும். அப்படிப்பட்ட செபத்தோடு கூடிய முயற்சி இருக்கும் போதே கேட்டால், தட்டினால், திறக்கப்படும். தேடினால் கண்டடைவோம் எனும் உண்மையில் தெளிவு பெறுவோம்.

சோர்ந்து போகாது, மனம் தளராது நம்முடைய தேவைகளிலும், மக்கள் நலனிலும் வேண்டுதலை முன்வைப்போம், இறைவனின் சித்தமாயின் அது நமக்கு அருள வேண்டியிருந்தால் நிச்சயம் கிட்டிடும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில்.

ஆ.வி.டேவிட்.

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.